## சுருக்கம்

கருணை அடிப்படையில் பணிநியமனம் – 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துதல் – ஆணை மற்றும் வழிமுறைகள் வெளியிடப்படுகின்றன.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை

அரசாணை (நிலை) எண். 48

நாள்: 26.02.2021
சார்வரி, மாசி 14
திருவள்ளுவர் ஆண்டு 2052
படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள்.02.03.2016.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
3. கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.18395/2020, நாள் 06.11.2020.

------

**ஆணை:–**

மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற அரசுப் பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவதில் பல்வேறு காரணங்களால் ஏற்படும் காலதாமதத்தினை கருத்திற்கொண்டு, 19.02.2016 அன்று சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை பணிவரன்முறை செய்திட ஆணை மற்றும் வழிமுறைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே 2–ல் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையிலான பணி நியமனம் குறித்து வரையறுக்கப்பட்ட ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகள் (Guidelines) வெளியிடப்பட்டுள்ளன.

(த.பி.பா.,)

Scanned with CamScan

3. மேலே 3–ல் படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தினர் கீழ்க்கண்ட கோரிக்கையினை முன்வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்:-

**"கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்களின் பணிவரன்முறை ஆண்டுக் கணக்கில் தேக்கமடைந்துள்ளதால், இவ்வலுவலர்களின் பணி நலன்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், நிலுவையில் உள்ள இனங்களை ஒரே அரசாணையில் பணிவரன்முறை செய்திட வேண்டும்".**

4. அதனடிப்படையில், வருவாய் துறையின் செயற்குறிப்பில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை வருவாய்த் துறையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிருவாக அலுவலர்கள் மற்றும் தட்டச்சர் ஆகியோருக்கு, எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணிநியமனங்களையும், ஒரே அரசாணையில் பணிவரன்முறை செய்ய பரிந்துரைத்துள்ளது.

5. வருவாய் துறையின் செயற்குறிப்பினை ஏற்று, அனைத்து துறைகளிலும் இதனை செய்தால் நியாயமாக இருக்கும் என்பதால் 02.02.2016 முதல் 31.12.2019 வரையுள்ள கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட ஏதுவாக, இந்நேர்வினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, கீழ்க்கண்ட வழிமுறைகளை (Guidelines) பின்பற்ற வேண்டும் என ஆணையிடுகிறது:-

(5.1) **02.02.2016 முதல் 31.12.2019 வரை** கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு **(Relaxation of Rules)** மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு **(Exemption of Government Orders)** தேவைப்படாத அனைத்து **பணியாளர்களின்** பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்தப்படும்.

(5.2) மேலே பத்தி 5.1–ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

(5.3) கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்த விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படும் பணியாளர்களை பொறுத்தவரையில், அவர்களை தற்காலிக அரசு பணியாளர்களாக

Scanned with CamScanner

கருதி நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு அவர்களுக்கு இரண்டாம் மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்.

(5.4) மேலே 5.3-ல் குறிப்பிடப்பட்ட அரசு பணியாளர்கள் பொருட்டு உரிய விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படும் கருத்துருவினை அரசிற்கு உரிய வழிமுறையாக அனுப்பப்பட வேண்டும். பின்னர் விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு குறித்த அரசாணை வெளியிடப்பட வேண்டும்.

5. இவ்வரசாணை, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையின் அ.சா.எண்.6945/ஜி2/2021, நாள் 26.02.2021–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / முதன்மைச் செயலாளர் /
செயலாளர், தலைமைச் செயலக அனைத்து துறைகள்.
அனைத்துத் துறை தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் /அனைத்து மாவட்ட நீதிபதிகள்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–600 003.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–600 0018.
மாநில கணக்காயர் (துணிக்கை), சென்னை–600 035.
அனைத்து சம்பள கணக்கு அலுவலர்கள் / அனைத்து கருவூல அலுவலர்கள்.
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–600 009.
அனைத்து அமைச்சர்களின் நேர்முக உதவியாளர்கள், சென்னை–600 009.
பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை –1. (அரசிதழில் வெளியிட)

<u>நகல்:</u>

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, சென்னை–600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் அனைத்து பிரிவுகள்.
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை–600 009.
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம், சென்னை–600 005.
இருப்புக் கோப்பு / உதிரி நகல் / சுத்த நகல் கோப்புக்கு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26/2/2021
பிரிவு அலுவலர்
26/02/2021

Scanned with CamScanner